# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்:0401 /2016

ஆணை எண்: 133 /2016

நாள்: 02/08/2016

திரு.N.சுடலைராஜ்,
கிண்ணிக்கண்ணன் விளை,
அகஸ்தீஸ்வரம் – 629 701.
கன்னியாகுமரி மாவட்டம். — மனுதாரர்

செயல் அலுவலர்,
தென்தாமரைக்குளம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் –629 701 — எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி கிண்ணிக்கண்ணன் விளையில் வசித்து வரும் திரு. N.சுடலைராஜ், அவர்களின் 09.05.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 401/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைக்குளம் பேரூராட்சியில் உள்ள திரு. N.சுடலைராஜ், என்பவரது 09.05.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்கண்டவாறான புகார்களை தெரிவித்துள்ளார்:–

கன்னியாகுமரி மாவட்டம், தென்தாமரைக்குளம் பேரூராட்சிகுட்பட்ட கிண்ணிக்கண்ணன் விளையில் சர்வே.எண்.618/17A. 371/2 செண்ட் தென்னைபுர இடமும் அதில் ஒரு மோட்டார் பம்பு ரூமும் உள்ளது. இந்த இடம் எனது ஒன்று விட்ட சகோதரர் எஸ்.தாணு மலையப்பெருமாள் நாடார், 50/2013 உயில் பத்திரப்படி எழுதிக் கொடுத்த எங்கள் குடும்ப சுடலைமாட சாமி கோயில் பராமரிப்பில் உள்ளது. இந்த இடத்தில் 21/4 செண்ட் அகஸ்தீஸ்வரம் B.D.O அவர்களுக்கு தானபத்திரம் 2770/61–ன் படி கொடுக்கப்பட்டுள்ளது. 26.04.2016 அன்று பேரூராட்சி துணைத்தலைவர் மற்றும் பிறர் இந்த எல்லா இடமும் பேரூராட்சிக்கு சொந்தமானது என்று தென்பக்க வேலியை வெட்டி விட்டார்கள். இந்நிகழ்வு குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் காவல் அதிகாரிகள் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு கூறியதன் படி தாம் தப்பித்து வருவதற்காக தங்கள் பம்பு செட்டுக்கு மேற்கு கரை ஓரமாக பாதையாக உபயோகப்படுத்த சம்மதித்தும் அழித்த முள்வேலியை திருப்பி வைக்க அனுமதிக்குமாறும் எழுதி கொடுத்து விட்டு தப்பித்து வந்ததாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தென்தாமரைக்குளம் பேரூராட்சி அலுவலர், திருமதி.தங்கப்பழம் என்ற ஸ்ரீலஷ்மி என்பவரிடமிருந்து 1495/15 என்ற நன்கொடை சீர்திருத்த பத்திரத்தை பேரூராட்சி தலைவரே தயார் செய்து வாங்கியுள்ளார்கள். இதில் வேண்டுமென்றே கிணறு தென்தாமரைக்குளம் பேரூராட்சி பராமரிப்பில் உள்ளது என ரெக்கார்டு உண்டு பண்ண எழுதப்பட்டுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால் எழுதிக் கொடுத்த நபருக்கு எவ்விதமான பாத்தியமும் கிடையாது என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பத்திரம் எழுதி வாங்கியவுடன் தங்களது இடத்தில் முள் கம்பியும் 5 அடி உயர குத்துக் கல்லும் நட்டுள்ளார்கள்.

கிணறு இருக்கும் 21/4 செண்ட் இடத்தில் கிணற்றை அடித்து உடைத்து விட்டு வேறு கட்டுமானம் செய்வதை அறிந்து கிணற்றை உடைக்காமல் இருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை பெற நா்கர்கோவில் மாவட்ட முதன்மை முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு எண்.359/2015–ல் மனுதாரரும் மற்றும் அவரது சகோதரரும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே, சட்டவிரோதமாக தங்கள் கோவில்வகை பட்டா பூமிக்குள் போட்டிருக்கும் முள் கம்பிவேலியையும், குத்துக்கல்லையும் மாற்றித் தர வேண்டியுள்ளார்.

மனுதாரரின் முறையீடு தொடர்பாக தென்தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:–

புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட இடமானது அகஸ்தீஸ்வர வட்டார வளர்ச்சி அலுவலருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த இடத்தில் ஊராட்சி ஒன்றியம் மூலம் கிணறு வெட்டப்பட்டு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. இக்கிணற்றையும், சுற்றியுள்ள பாதையையும் வேலி இடப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு செய்யப்பட்டிருந்தது.

பேரூராட்சிக்கு சொந்தமான இடங்கள் அனைத்தும் பாதுகாக்க, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு முள்கம்பிவேலி வேலை முடிக்கப்பட்டுவிட்டது.

மேற்கூறப்பட்ட இடமானது நன்கொடையாக பெறப்பட்டதன் அடிப்படையில் வருவாய் துறையில் இருந்து பட்டா மற்றும் FMB வரைபட நகல்கள் பெறப்பட்டது, மேற்படி FMB வரைபடத்தில் உள்ளவாறுதான் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வரைபடத்தில் தென்பகுதி மேற்கு கடற்கரை சாலை. இச்சாலையின் ஓரத்திலேயே மனுதாரருக்கு சொந்தமான இடம் உள்ளதனால் அவரின் இடத்திற்கு செல்ல பாதை இல்லை என்பது உண்மைக்கு மாறானது என செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது 07.06.2016 நாளிட்ட மனுவில் தனக்கு கண்புறை நோய் ஏற்பட்டு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருப்பதால் தனது மனுவை ரத்து செய்யக் கேட்டுள்ளார்.

இந்நிலையில் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அதனுடன் பெறப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும், மனுவை ரத்து செய்ய மனுதாரர் கேட்டுள்ளதன் அடிப்படையிலும் மனுதாரரின் மனு செயல் அலுவலரின் விளக்கம்ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப்பிரிவு 10(3) (b)–ல்குறிப்பிட்டுள்ளபடி 1952–ஆம்ஆண்டு விசாரணைகளின் ஆணையச் சட்டத்தின்படி ஆணையிடப்பட்டிருக்கின்ற விசாரணை ஒன்றின் தொடர்பான பொருட்பாடு எதனையும் அல்லது நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது எனக் குறிப்பிட்டுள்ளது. இந்நேர்வு

சம்பந்தப்பட்ட சிவில் வழக்கு எண்.359/15 நிலுவையில் உள்ளது. எனவே, மனுதாரரின் முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரிப்பதற்கு தற்போது வழிவகை இல்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்கிறது. எனவே, மனுதாரரின் மனு நிராகரிக்கப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்:

1. செயல் அலுவலர்,
   தென்தாமரைக்குளம் பேரூராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம் –629 701

2. திரு.N.சுடலைராஜ்,
   கிண்ணிக்கண்ணன் விளை,
   அகஸ்தீஸ்வரம் – 629 701.
   கன்னியாகுமரி மாவட்டம்.